நல்வழிப்படுத்துவதற்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் இருக்கும்.

2. மாநில அரசு நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களில் பயனடையும் முதியோர்களுக்கு வழங்கப்படும் உணவூட்டு மானியம் 300/- ரூபாயிலிருந்து 1,200/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சமூக நலத் துறையின்கீழ், சென்னை, கடலூர், தஞ்சாவூர், சேலம், சிவகங்கை, மதுரை, திருநெல்வேலி, பெரம்பலூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தச் சேவை இல்லங்களில் தங்க ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, இடைநிலை ஆசிரியைப் பயிற்சிக்கான மாணவியர் சேர்க்கை மற்றும் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களிலும் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு 24,000/- ரூபாயிலிருந்து 72,000/- ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக இத்திட்டங்களினால் அதிக பயனாளிகள் பயனடைவர்.

பிற்பகல் 12-50

(ஆ) பார்வையற்றவர்களுக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்குதல், காது கேளாமையைப் போக்க முன்னோடித் திட்டம், சிறப்புக் குழந்தைகளுக்கான மாற்றுத் தகவல் பரிமாற்ற முறை திட்டம் செயல்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும்வகையிலும், நாட்டின்

வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும்வகையிலும், ஏனைய மக்களுக்கு இணையாக மாற்றுத் திறனாளிகள் வாழும்வண்ணமும் அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கு மேலும் பயனளிக்கக்கூடிய பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு 2012 ஆம் ஆண்டு முதல் ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மடக்குக் குச்சிகள்மூலம் மிக அருகிலுள்ள பொருட்களை மட்டுமே அறிந்துகொள்ள இயலும். எனவே, நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும். இந்தக் குச்சிகள்மூலம் அவர்கள் அதிக தூரத்திலுள்ள பொருட்களையும் உணர்ந்துகொள்ள இயலும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் தங்குதடையின்றி பயணிக்க இயலும். இந்த ஆண்டு 5,000 பயனாளிகளுக்கு நவீன ஒளிரும் மடக்குக் குச்சிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் 1 கோடியே 58 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. காது கேளாமையை தொடக்க நிலையிலேயே கண்டறிந்தால் இந்தக் குறைபாட்டை நீக்கிட இயலும். எனவே, இதற்கென ஒரு முன்னோடித் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். காது கேளாத குழந்தைகள் சென்னை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் அதிகளவில் உள்ளனர். எனவே, இந்த மாவட்டங்களில் குழந்தை பிறந்தவுடன் ஒரு சிறப்புப் பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னையில் 11 மாநகர தாய்-சேய் நல மருத்துவமனைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். சிவகங்கை மாவட்டத் தலைமை மருத்துவமனை, வட்டார மருத்துவமனை மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 30

3. புற உலக சிந்தனையற்றோர், மூளை முடக்குவாதம், நுண்ணறிவுத் திறன் மற்றும் மரபுவழி குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பேச்சு மற்றும் மொழித் திறனை மேம்படுத்திடும்வகையில் மாற்றுத் தகவல் பரிமாற்ற முறை செயல்படுத்தப்படும். இத்தகைய சிறப்புக் குழந்தைகள், படங்கள் மற்றும் இதர மாறுபட்ட முறைகளில் மற்றவர்களுடன் கலந்துரையாட பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தின்படி தொடு திரையுடன் "ஆவாஸ்" AAVAAZ *என்னும் சிறப்பு மென்பொருளுடன்கூடிய கையடக்கக் கணினி* i-Pad *மூலம் சிறப்புக் குழந்தைகளிடமுள்ள தகவல் பரிமாற்றக் குறைபாடு களையப்படும். மேலும், சிறப்புக் குழந்தைகள் வகுப்பறையில் துடிப்புடனும், மிகவும் திறமையுடனும் கல்வி கற்கவும், மற்றவர்களுடன் உரையாடவும் இத்திட்டம் பயனளிக்கும். முதல்கட்டமாக இந்தச் சிறப்பு வசதிகள் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்மூலம் பயனடையும் குழந்தைகள் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் பயிலும் 416 குழந்தைகளுக்கு வழங்கப்படும். எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12-55

(இ) ஆவடி, சென்னை, பருத்திப்பட்டு ஏரியை மேம்படுத்துதல், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டையில் 'அம்மா சுற்றுச்சூழல் பூங்கா' அமைத்தல், ஈரோடு மாவட்டம், பெரியகுளம் ஏரியைப் புனரமைத்தல், ஈரோடு, முத்தம்பாளையம் ஏரியை மேம்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.*

1. இயற்கை எழிலோடுகூடிய ஏரிகள் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், நிலத்தடி நீர் பாதுகாக்கவும் பயன்படுகின்றன.